**செய்தி வெளியீடு எண்: 890** **நாள்: 11.10.2010**

தமிழ்நாடு உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் கூட்டம் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர் திரு.T.P.M.மைதீன்கான் அவர்கள் தலைமையில் 11.10.2010 ஆம் நாள் காலை 11.30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் அரசு செயலாளர் திரு.T.N.இராமநாதன், I.A.S., வருவாய்த் துறை அரசு முதன்மைச் செயலாளர், திரு.K.தனவேல், I.A.S., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர், திரு.P.M.பஷீர் அஹமது, I.A.S., மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் ஜனாப்.முஹம்மது வலியுல்லாஹ் ரஷாதி, ஜனாப்.தேங்கை ஷர்புத்தீன் மிஸ்பாஹி, ஜனாப்.O.S.M.முஹம்மது இல்யாஸ் காஸிமி, ஜனாப்.ஃபாஸில் முஹம்மது இஸ்மாயில் நாஜி, ஜனாப்.முஹம்மது அய்யூப் ரஹ்மானி, ஜனாப்.S.முஜீபுர் ரஹ்மான் மஸ்லஹி, ஜனாப்.A.முஹம்மது யூனுஸ், ஜனாப்.முஹம்மது அலி பேக், ஜனாப்.M.G.ஷிஹாபுத்தீன் மஹ்லரி மற்றும் ஜனாப்.G.K.முஹம்மது இல்யாஸ் ரியாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை, உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து விவாதிக்ககபபட்டது. இத்திட்டத்தில் இதுவரை 10879 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு 2009-2010 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சமும் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ. 1 கோடியும் ஆக ரூ.1,10,00,000/- (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை 127 குடும்பங்களைச் சேர்ந்த 148 நபர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு ரூ.4,34,420/- (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நானூற்று இருபது மட்டும்) அளவுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலரும் உலமாக்கள் நல வாரிய உறுப்பினர் செயலருமான திரு.A.முகமது ஜமாலுத்தீன்,M.Com., B.L., M.B.A., கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**